2019

2019 401588

No. of Printed Pages : 5

**1711**

Register Number

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

I. (அ) **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

1. சொன்னயம் - இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.

2. ''உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.
- இக்குறட்பாவை அந்வயப்படுத்தி எழுதுக.

3. செயப்பாட்டு வாக்கியத்தை சான்றுடன் விளக்குக.

4. கவிதை குறித்து கவிஞர் சுரதா கூறும் விளக்கம் யாது ?

5. வினைத்தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

[ Turn over

6. உழவன் காலையில் காளையை ஓட்டிச் சென்றான். அவன், கடும்பனியிலும் தன் பணியைச் சிறப்பாகச் செய்தான்; வாழைத் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சினான்; ஏழையாக இருந்தாலும் எடுத்த வேலையை வேளை தவிராது செய்து முடித்தான்.
   1. உழவுத் தொழில் குறித்து ஒரு பழமொழி (அ) திருக்குறள் எழுதுக.
   2. இப்பத்தியில் அமைந்த மயங்கொலிச் சொற்களை எடுத்தெழுதுக.

7. இலக்கணப் போலி குறித்து எடுத்துக்காட்டுடன் விளக்குக.

8. 'நலங்கிள்ளி நெடுங்கிள்ளி போரிட்டனர்'
   - இத்தொடரில் பயின்று வரும் தொகையை விளக்குக.

9. பேசுதல் - பேச்சாற்றல் வேறுபடுத்துக.

10. சிறுகதை குறித்து 'எட்கார் ஆலன்போ'வின் கூற்று யாது ?

(ஆ) **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. தொகை நிலைத் தொடர்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

12. தங்கயானை, பற்பசை - இச்சொற்களை பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

13. தன்வினை பிறவினையாக்குவதற்கு உரிய வழிமுறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

14. ''ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
    நாகம் உயிர்ப்பக் கெடும்''
    -இக்குறளில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.

15. நல்லார் செய்யுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
    அல்லார் செய்யுங்கேண்மை ஆகாதே - நல்லாய் கேள்!
    காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர் நாள்
    போய்முற்றின் என்னாகிப் போம் ?
    -இந் நன்னெறிப் பாடலைப் படித்து உரைநடைப்படுத்துக.

16. மாணவர்கள் பேச்சாற்றலை வளர்க்க மனதிற் கொள்ள வேண்டியவை யாவை ?

17. எச்சம் என்றால் என்ன ? அதன் வகைகளைக் கூறி விளக்குக.

18. ''கானகத்தின் கவினைக் கானகத்திலன்றி வேறெங்கும் காணல் இயலாது. எத்தனை வடிவான இலைகள்! எத்தனை நிறமான மலர்கள்! எத்தனை சுவையான காய்கள்! எத்தனை இனிப்பான பழங்கள்! எத்தனை வகையான மரங்கள் செடிகள் கொடிகள்! அம்மம்ம! இறைவன் படைப்பின் பல்வேறு வகையான வியத்தகு அமைப்பும் அழகும் ஒருங்கு பொதுளிய அடவிகளின் விழுமிய தன்மை எங்ஙனம் கூறுவேம்! எவ்வாறு காட்டுவேம்! கானகங்களின் அடர்ந்துயர்ந்த தோற்றத்தைத் காண்கையில் உள்ளமும் உணர்வும் மேலுயர்ந்து செல்கின்றன! வியப்பும் புதுமையும் கருத்தைக் கவர்ந்திழுக்கின்றன!''

1. இப்பத்தியின் மையக் கருத்து யாது ?
2. இப்பத்தியில் அமைந்துள்ள அருஞ்சொற்கள் யாவை ?
3. இப்பத்தியில் எவை எவை வர்ணிக்கப்படுகின்றன ?
4. இப்பத்தியில் உள்ள தொடரினை எழுதுக.

## பகுதி - ஆ

II. (அ) **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

19. நாட்டின் கல்வி அமைப்பிற்கான குறிக்கோள்கள் எவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது ?

20. 'பேசுதல்' என்னும் சொல்லுக்குரிய அறிந்த சொற்கள், பயன்படுத்துகின்ற சொற்கள் நான்கினை பட்டியலிடுக.

21. நவரத்தினங்கள், ஏழிசை தொகைச் சொற்களை விரித்தெழுதுக.

22. சொல் கற்பிக்கும் முறைகள் பற்றி கூறுக.

23. பவனந்தி கூறும் பேச்சுக்குப் பொருந்தும் பத்து அழகுகள் (பத்தழகுகள்) யாவை?

24. 'போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்'' - இதில் பயின்று வரும் தொடையைக் கூறி விளக்குக.

25. பிழைகளின் வகைகளைக் கூறுக.

26. வந்தப் பையன், அந்த பொருள் இதில் உள்ள பிழைகளை நீக்கி அதற்கான காரணத்தை எழுதுக.

27. இயந்திர மொழி பற்றிக் கூறுக.

28. குழந்தைகளுக்கான இணையதளங்கள் எவையேனும் நான்கினை எழுதுக.

(ஆ) **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

**5x4=20**

29. பாட ஏற்பாடு - பாடத் திட்டம் - பாட நூல் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது விளக்குக.

30. சொற்களஞ்சியம் பெருக்க பள்ளியில் நீவிர் பயன்படுத்திய சொற்களஞ்சிய முறைகளில் ஏதேனும் நான்கினை விளக்குக.

31. மாணவர்களிடம் படைப்பாற்றலை வளர்க்க உதவும் உத்திகள் யாவை ?

32. இரட்டைத் தொடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

33. கற்பித்தலில் பிழைகளைக் களைவதற்கான படிநிலைகள் யாவை ?

34. நேரிணை - எதிரிணை - செறியிணை சொற்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டு தந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

35. கணினிவழி மொழிக் கல்வி பற்றி எழுதுக.

36. மொழியாளுமைத் தேர்வு பற்றி விளக்குக.

## பகுதி - இ

**III.** ஒவ்வொரு வினாவிற்கும் **ஐந்நூறு சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.
**2x10=20**

**37.** (அ) ஒரு நல்ல பாடநூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை கூறி அதன் அமைப்பு முறையை விளக்குக.

**அல்லது**

(ஆ) கவிதை எழுதும் உத்திகளை விளக்கி கற்பித்தலின் போது நீவிர் பயன்படுத்திய உத்தி ஏதேனும் இரண்டினை சான்றுடன் விளக்குக.

**38.** (அ) மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பை விளக்குக. மொழி கற்பித்தலில் அதன் பயன்பாட்டைக் கூறுக.

**அல்லது**

(ஆ) சிறந்த தேர்வின் பண்புகளைக் கூறி விளக்குக.

- o 0 o -